# லுனுகல பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுன் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, லுனுகல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமங்களுக்கு இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

--------------------------------------------

நிலையான சொத்துக்கள் மற்றும் ஆதனங்களை பெறுமானத் தேய்வு கணித்தல், பொருட் பதிவேட்டு பண்டங்கள் மற்றும் இறுப்பு கணக்கெடுத்தல் மற்றும் விலையிடல் கொள்கைகள் என்பன நிதிக் கூற்றுக்களில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிரதேச சபையின் நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கின் பெறுமதிகள் என்பன ஒவ்வொன்றும் சமப்பட வேண்டும் எனினும் அம் மீதிகளிடையே ரூபா 906,406 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நூலகப் புத்தகங்களின் பேரேட்டின் படி சரியான பெறுமதி ரூபா 925,869 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,763,144 என காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நூலகப் புத்தக கணக்கின் மீதி ரூபா 837,275 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வாடகை வருமானம் ரூபா 3,942,329 தொகை எனினும், பேரேட்டின் பிரகாரம் பிழையற்ற மீதி ரூபா 3,486,366 எனக் காட்டப்பட்டிருந்தமையால் வாடகை வருமானம் ரூபா 455,963 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வீதவரி வருமானம் ரூபா 1,344,680 தொகை எனினும் பேரேட்டின் பிரகாரம் பிழையற்ற மீதி ரூபா 1,721,741 ஆக காணப்பட்டமையால் ரூபா 377,061 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது ரூபா 4,910,842 பெறுமதியான நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 61,500 இற்கான மந்திரிமார் படி மற்றும் ரூபா 1,704,753 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 876,266 இற்கான நீதிமன்றத் தண்டப்பணத்தினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 17 திகதி சபைக்கு வழங்கியிருந்த ரூபா 2,161,900 இற்கான டிரக்டர் வண்டியின் பெறுமதியினை நிலையான சொத்துக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஐ) முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 158,595 இற்கான முத்திரை கட்டணத்தினை மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------

சபையிளால் சமர்பித்திருந்த நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த மீதிகள் குறிப்பிட்ட பேரேட்டுக் கணக்குடன் இணக்கஞ் செய்யும் போது ரூபா 1,126,696 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.5 தொங்கல் கணக்குகள்

------------------------------------

ரூபா 678,671 இற்கான தொங்கல் கணக்கின் செலவு மீதியினை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 25,942,641 ஆக காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 17,778,649 ஆகும்.

1.3.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

ரூபா 15,071,193 பெறுமதியான 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1980 இன் 47 இலக்க சுற்றாடல் சட்டம் மற்றும் 2000 நவம்பர் 22 திகதிய இலக்கம் 1159/22 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 23 வர்த்தகங்கள் / கைத்தொழில்கள் தொடர்பாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கியிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | வைப்புச் செய்த திகதி முதல் இரண்டு வருடயங்களுக்குள் உரிமை கோரப்படாத ரூபா 90,333 பெறுமதியான 20 வைப்புக்களை உரிமையளிப்புச் செய்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 746,535 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,924,972 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய குறைதல் ரூபா 1,178,437 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

--------------------------------------------------------------

நிலுவை வருமானம் அறவீடு செய்தல்

-------------------------------------------------------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஏக்கர் வரி நிலுவையில் 18% தொகை ஒன்று 2014 ஆண்டின் போது அறவீடு செய்திருந்ததுடன் வீட்டு வாடகை வீதவரிகளில் முறையே 9.6%

உம் மற்றும் 21.8% உம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் நிலுவை வருமானம் அறவீடு செய்யும் முன்னேற்றம் அதிருப்திகரமான நிலைமை ஒன்றினை காட்டியது.

2.2.2 வீதவரி

-----------

05 வருடங்களுக்கு ஒருமுறை வீதவரியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் வீதவரி அறவிடப்பட வேண்டும் எனினும் 2014 ஆண்டு தொடர்பாக 2005 ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாக வைத்து வீதவரி அறவிடப்படுகின்றது.

2.2.3 ஆதன வரி

-----------------

சபைக்குச் சொந்தமான 08 வாடகை ஆதனங்கள் 2011 ஆண்டு முதல் 2014 வரை 04 வருடங்கள் வருடாந்த வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக ரூபா 1,271,523 இற்கான தொகையொன்று 2014 திசெம்பர் 31 திகதி வரை சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.4 கடை வாடகை

-----------------------

1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான சந்தையின் கடைகள் குறைந்த பட்சம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையேனும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கடை வாடகை அறவிடப்பட வேண்டும் எனினும் சபையினால் மடொல்சிம நகரில் 28 கடைகளுக்காக 2005 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாக வைத்து வாடகை அறவிடப்பட்டு காணப்பட்டது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-------------------------------------------------

(அ) ஊவா மாகாண சபை நிதியத்தின் கீழ் சபையினால் 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது 30 சீமெந்து பைகளுக்காக ரூபா 27,900 தொகை ஒன்று தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்தப்பட்டிருந்த போதும் 2015 ஜூன் 26 கணக்காய்வு திகதி வரை குறிப்பிட்ட கோயிலுக்கு சீமெந்து கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான நூலகத்தில் ரூபா 29,066 பெறுமதியான 172 புத்தகங்கள் தொகை ஒன்று நூலகத்தில் காணப்படவில்லை. அத்துடன் அப்புத்தகங்களை திரும்பப் பெறுவதற்கு அல்லது அதற்காக பணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---------------------------------------------------

சபைக்குச் சொந்தமான இலக்கம் 78–9579 கொண்ட கைடிரக்டர் வண்டி பயன்படுத்தப்படாமல் சபை வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்